உ

அருட்பெருஞ்ஜோதி
திருவருட்பிரகாசவள்ளலார் தமது
மெய்யன்பர்கட்கு உபதேசித்தருளிய

உண்மை நெறி



ஆசிரியர்
பாக்கபுரி
பாலசுந்தர
ரின்
மூன்றும்

ஆசிரியப்
பாக்களுடன்
பதிப்பு

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,
அம்மன் கோயில் தெரு, G. T., சென்னை.
ரிஜிஸ்டர்ட்] 24-5-1936 [பை. 3

உ

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

கலிநிலைத்துறை

ஆகமாந்தமும் வேதத்தினந்தமும் அறையும்
பாகமாம் பரவெளி நடம் பரவுவீ ருலகீர் [ம்
மோகமாந்தருக் குரைத்திலேன் இது சுகமுன்னு
யோகமாந்தர்க்குக்காலமுண்டாகவேயுரைத்தேன்

குறள் வெண்பா

மருட்பிறவி நீக்கி அருட்டழைய வைக்கும்
அருட்பிரகாசனார் வாழ்க.

கலிநிலைத்துறை

கூறுஞ் சாத்திரம் பற்பல
குலவிடும் பொருளைத்
தேறுங் காலருள் வழங்கிடும்
திகழொளி வள்ளல்
வீறு சேர்ந்த சன்மார்க்கத்தை
விளக்கிய தெய்வம்
வேறு கண்டிலேன் கண்டிரேற்
பெரியர்காள் விளம்பீர் !

நாமாவளி

ராமலிங்கமே நமதெய்வம்
நாமெல்லோருந் துதிசெய்வோம்.

உ

அருட்பெருஞ்ஜோதி

உண்மை நெறி

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு

1 ஏமசித்தி. 2. சாகாக்கல்வி. 3. தத்துவ நிக்ரகஞ் செய்தல். 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.

இவைகளைப் பெறுவதற்கு

ஒழுக்கம் நான்கு வகைப்படும்

1. இந்திரிய ஒழுக்கம், 3. ஜீவ ஒழுக்கம்.
2. கரண ஒழுக்கம். 4. ஆன்ம ஒழுக்கம்.

நிலைமண்டல ஆசிரியப்பா

இந்திரிய கரண ஜீவ வான்ம
வொழுக்க முறைகளாற்பெறும் புருஷார்த்தம்
ஏம சித்தியொடு சாகாக் கல்வி
தத்வ நிக்ரகஞ் செய்தலு மிறைவன்
நிலையறிந் தம்மய மாதலு மாமே.

1. இந்திரிய ஒழுக்கம்

1. இந்திரிய ஒழுக்கமாவது:—கொடியசொல் செவி புகாது நாதம் முதலிய தோத்திரங்களைக் கேட்டல்; அசுத்த பரிசமில்லாது தயாவண்ணமாகப் பரிசித்தல்; குரூரமாகப் பாராதிருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; சுகந்தம் விரும்பாதிருத்தல்; இன்சொல்லாடல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்வித தந்திரத்தினாலாவது தடைசெய்தல்; பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்; ஜீவ உபகார நிமித்தமாய் சாதுக்கள் வாசஸ்தானங்களிலும், திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்; நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்; மித ஆகாரஞ்செய்தல்; மித போகஞ் செய்தல்; மலஜலோபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்; கால பேதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடைநேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்தபரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத் தியான சங்கற்பத்தாலும்

தடை தவிர்த்துக் கொள்ளல்; (மந்த தானுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்; (தீவிர தானுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்; இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல்; இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்; சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசந் தரித்தல்; அழுக்காடை யுடுத்தாதிருத்தல்—முதலியன இந்திரிய ஒழுக்கம்.

நிலைமண்டில ஆசிரியப்பா

1. உயர்தரு ஞான வுத்தம சற்குரு
மயர்வற வுரைத்த மாபெரு மொழுக்கம்
நான்கினில் முதலாய் நவின்ற இந்திரியம்
அடக்கு முறைதா னியாதோவென்னில்
தீதுறு மொழிகள் செவிபுகா தமைத்து
மாண்புகழ் நாத மறைகளைக் கேட்டல்
சுத்தா சுத்த மாய்ந்துளங் கொண்டு
பார்வையு மின்பம் பயக்கவே நோக்கி
அறுசுவை சுகந்தம் அடியோ டொழித்து
இன்புறு மொழியு மெழினல வாய்மையும்
அன்புடன் போற்றி ஆருயிர் தனக்கே

ஆபத் தூற்றிடி னருளை நினைந்தும்
எவ்வித தந்திரத் தாலுமே காத்தல்
உயிர்கட் காக வுதவிக ளியற்றி
உயர்திருப் பதியிலும் உத்தம ரவையிலும்
சஞ்சரித் திருத்தல் சாற்றிடு நன்மை
முயற்சியிற் கொடுத்த லெடுத்தலைச் செய்தல்
போக மிதமாய்த் துய்த்தலு முண்டி
யோகக் குறிபெறு மளவா லருந்தல்
கிரமமாய் மலஜலோ பாதை கழித்தல்
அம்மலங் காலா பேதத் தாலும்
வெம்மையுற் றிடுமா பாசத் தாலும்
தடைநே ரிடிலோ தக்க வோஷதி
பௌதிக மூலங் கொண்டு களைதல்
அன்றி சரபே தஸ்த பரிச
தந்திர மியற்றித் தவிர்த்தலுங் கூடும்
மூலாங்கப் பிரணவ தியான நினைப்பால்
முழுதுந் தவிர்த்தல் முறைமைய தாகும்
மக்களில் மந்தனும் தீவிர தானும்
முறையே சுக்கில மளவுடன் கழித்தல்
எவ்வகை யானுஞ் சுக்கிலந் தன்னை
எழிற்பெற வடக்கல் ஏற்புடைத் தாகும்

கோசம் உச்சி மார்பங் கங்களை
தேசுறு கவசங் கொண்டு மறைத்தல்
காலிற் குரடு தரித்தே குதலும்
மாசுறும் ஆடையை ஒழித்தலு மாய
ஈரொரு பத்து வின்ப நெறிகளை
எடுத்துரைத் தனனம் எழிற் பெருமானே.

2. கரண ஒழுக்கம்

2. கரண ஒழுக்கமாவது:—மனத்தைச்* சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்; ஜீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்; தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் ; முதலியன கரண ஒழுக்கம்.

---

* சிற்சபை என்பது—விந்து. அறிவு, பாலம், முச்சுடர், முச்சந்தி, முப்பாழ், நெற்றிக்கண், கபாடம், சபாத்துவாரம். மகம்மேரு, மூலம், சாகாத்தலை முதலிய ஒரு பொருட் கிளவியாம்.

நேரிசை ஆசிரியப்பா

கரண வொழுக்கங் கூறுங் காலை
மனதைச் *சிற்சபை யிடத்தே நிறுத்தல்
அதுதான் புருவ மத்தியின் முதலில்
நிற்கப் பழகல் நேர்மைய தாகும்
துர்விஷ யத்தைப் பற்று திருக்கச்
செய்தலுஞ் சீவ தோஷந் தன்னை
விசாரி யாமையுந் தன்னை மதியா
திருத்தலு மிராகத் துவேஷம் நீக்கி
இயற்கைச் சத்துவ மயமே யாதல்
தன்றத் துவங்களை அக்கிரமத்தில்
செல்லா தொறுத்தலு மாயவிம்
மூவிரு நெறிகளு முத்தி நல்கும்மே.

---

* முச்சுடர் தானே சிற்சபை விந்து
அறிவே பாலம் முப்பாழ் கபாடம்
மூலம் நெற்றிக் கண்மக மேரு
சாகாத் தலையொடு சபாஅத் துவாரம்
புருவ மத்தியே முச்சந் தியெனும்
சொற்க ளொருபொருட் கிளவியதாமே.

3. ஜீவ ஒழுக்கம்

3. ஜீவ ஒழுக்கமாவது:—ஆண்மக்கள், பெண் மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், சாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவருந் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்.

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆண்பெண் மக்க ளியாவ ரிடத்தும்
சாதி சமய மதமா சிரமம்
சூத்திர மொடு கோத்திரங் குலமும்
சாஸ்திர சம்பந்த தேச மார்க்கம்
உயர்ந்தோர் தாழ்ந்தோ ரென்னும் பேத
நீங்கியெல் லவருந் தம்மவ ராகச்
சமத்திற் கொள்ளுஞ் சீவ வொழுக்கம்
சன்மார்க் கத்தின் சிறப்புறு குறியே.

4. ஆன்ம ஒழுக்கம்

4. ஆன்ம ஒழுக்கமாவது:—யானை முதல் எறும்பு ஈருகத்தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும், அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு—யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேதமற்று எல்லாந் தாளுக நிற்றல் ஆன்ம ஒழுக்கம்.

நிலைமண்டல ஆசிரியப்பா

யானை முதலா மெறும்பீ ருகத்
தோன்றிய தூல சரீர மேவிய
சீவான் மாவே திருச்சபை யாயும்
அதனுள் ளாய பரமான் மாவே
பதியே யாகக் கொண்டு மியாதும்
நீக்கமற் றெங்கும் பேதம தற்று
எல்லாந் தானுய் நிற்கு நிலைமை
ஆன்ம வொழுக்க மென்னப்படுமே.

இவ்வண்ணம் நின்ருல் மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும்.

திருச்சிற்றம்பலம்

ஆன்ம நேய உரிமை

சமாதி வற்புறுத்தல்

வள்ளலார் வெளிப்படுத்தியிருக்கும் பாசுரங்களை யும் பத்திரிகையையும் இதனடியிற் காண்க.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆயுரைத்த அருட்ஜோதி வருகின்ற தருணமிதே யறிமினென்றே, வாயுரைத்தவார்த்தை யென்றன் வார்த் தைகளென் கின்றாரிம் மனித ரந்தோ, தாயுரைத்த திருப்பொதுவில் நடம்புரிந்தென் னுளங்கலந்த தலைவா! இங்கே, நீயுரைத்த திருவார்த்தை யெனவறியார் இவர றிவின் இகழ்ச்சி யென்னே. (1)

தொண்டாளப் பணந்தேடுந் துறையாள வுலகா ளச் சூழ்ந்த காமப், பெண்டாளத் திரிகின்ற பேய்மனத் தீர் நும்முயிரைப் பிடிக்க நாளைச், சண்டாளக் கூற்று வரி லென்புகல்வீர் ஞான சபைத் தலைவனும்மைக், கொண்டாளக் கருதுமினோ ஆண்டபின்னர் இவ்வுலகிற் குலாவு வீரே. (4)

அணங்கேழுபே ரோசையொடும் பறையோசை பொங்கக் கோரணிகொண் டந்தோ, பிணங்கழுவி யெ

டுத்துப்போய்ச் சுடுகின்றீர் இனிச்சாதும் பிணங்க ளே! நீர், கணங்கழுகுண் டாலுமொரு பயனுண்டே என்னபயன் கண்டீர் சுட்ட, எணங்கெழுஞ்சாம் பலைக் கண்டீ ரதுபுன்செய் எருவுக்கும் இயலா தன்றே. (6)

துணம்புதைக்க் வுயிரடக்கங் கொண்டதுசுட்டா லதுதான் கொலையா மென்றே, வணம்புதைக்க வேண் டுமென வாய்தடிக்கச் சொல்கின்றேன் வார்த்தை கேட்டும் பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச் சம்மதிக்கும் பேயரே! நீர், எணம் புதைக்கத் துயில் வார்நும் பாற்றுயிலற் கஞ்சுவரோ யிழுதையீரே. (7)

கட்டாலுங் கனத்தாலுங் களிக்கின்ற பேயுலகீர் கலைசோர்ந் தாரைப், பொட்டாலுந் துகிலாலும் புனை வித்துச் சுடுகின்றீர் புதைக்க நேரீர், சுட்டாலுஞ் சுடும துகண்டு உமதுடம்பு துடியாதென் சொல்வீர் நும்மைத் தொட்டாலுந் தோடமுறும் விட்டாலுங் கதியிலைமேற் சூழ்வீ ரன்றே. (8)

பானளிக்குந் தேகமிது சுடுவதபராதமெனப் பகர்கின் றேனீர், சிரநெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர் கள் பற்பலருஞ் சித்த சாமி ஊரனளிக்க வெழுகின்ற திருநாள்வந் தடுத்தனவீ துணர்ந்து நல்லோர், வரன ளிக்கப் புதைத்தநிலை காணீரோ கண்கெட்ட மாட்டி னீரே. (9)

புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக் கருங்கடலிற் போகவிட்டீர், கொலைத்தொழிலிற் கொடியீர்நீர் செத்தாரைச் சுடுகின்ற கொடுமை நோக்கி, கலைத்தொழிலிற் பெரியருளங் கலங்கினரக் கலக்கமெலாங் கடவுள் நீக்கித், தலைத்தொழில்செய் சன்மார்க்கந் தலையெடுக்கப் புரிகுவதித் தருணந் தானே. (10)

திருச்சிற்றம்பலம்

சமாதி வற்புறுத்தும் பத்திரிகை

(சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு மாத்திரம்)

திருச்சிற்றம்பலம்

அன்புள்ள நீங்கள் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு மிகவும் உரிமையுடையீர்களாயின் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது. நீங்களும் உங்களை அடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளால் சுகமாக வாழ்வீர்களாக. கர்மகாலமுதலியபேதங்களால் யாருக்காயினும் தேக ஆனி நேரிட்டால்தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்ப எழுந்து திரும்ப நம்முடன் இருக்கப் பார்ப்போமென்கிற முழு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுந்

துயரப்படாமலும், அழுதால் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடனிருக்க வேண்டும். புருடனிறந்தால் மனைவி தாலி * வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன்வேறுகலியாணப் பிரயத்தினம்செய்ய வேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம் **கர்ம காரியங்கள்** ஒன்றும்செய்யவேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒருதினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்டமட்டில் **அன்னவிரயஞ்** செய்ய வேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால் சமரசவேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலை பெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுர சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சிகொடுக்குந்தருணம்மிகவும் அடுத்த சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாக இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். **இது சத்தியம் சத்தியம்.** இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட்டறிந்தபின் தகனஞ் செய்யக் கூடாது. **அது சன்**

---

* பெருந்தயவினால் வந்த உண்மை வார்த்தையாகும்.

மார்க்க சங்கத்திற்குத் தக்கதல்ல. ஆகலில் மேற்கண்ட படி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக. எனக்கு உலகு அறிவு தெரிந்ததுதொட்டு எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில் என்னுடன் பழகியும், என்னை நம்பி யடுத்தும், என்னைக் கேள்வியில் விரும்பியும் எனக்குரிமைப்பட்டும், இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக்கொடுத்து சமரச சன்மார்க்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுளத்துக் கருதி, பெருங்கருணை வள்ளல் சாலைக்குரியவர்களாகி இருந்தும், அவநம்பிக்கையுட னிருக்கின்றவர்கள் விஷயத்திலும் இந்த உபகாரம் செய்தருளுவார். ஆனால் அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள். ஆகலில் நம்பிக்கையுடனிருங்கள், பெரிய களிப்பை அடைவீர்கள்.

இது சத்தியம்.

சாலை சம்பந்தமில்லாதவர்களுக்கு இந்தக் கடிதத்தைத் தெரிவிக்க வேண்டாம்

பிரமோதூத ௵
சித்திரை ௴ 18௳

சிதம்பரம்
இராமலிங்கம்

ஜோதி பிரஸ், சென்னை.

சமரச சுத்தசன்மார்க்க சங்க நூல்கள்

அம்மன் கோயில் தெரு, G. T., சென்னை.

1.	திருவருட்பா முழுப்புத்தகம் 2 வால்யம் நூதனபதிப்பு பட்டு காலிகோ பைண்டு	6	0	0
	முன்பணம் அனுப்பினால் தபால்செலவு இனாம்.			
2.	திருவருட்பா முற்பகுதிவரை விருத்தியுரை	0	12	0
3.	மகாதேவமாலை விருத்தியுரை	0	6	0
4.	சிவநேச வெண்பா வரையில் விருத்தியுரை	0	6	0
5.	இங்கிதமாலை மூலமும் உரையும்	0	2	0
6.	திருவருட்பா ஆயிரம் பாட்டு 0-2-0;	0	2	6
7.	திருஆயிரம் பட்டு கிளோஸ் பைண்டு	0	4	0
8.	ஜீவகாருண்ய ஒழுக்கம் 3 பாகம்	0	1	6
9.	சுவாமிகளின் விரிவான சரித்திரம்	0	2	0
10.	அருட்பெருஞ்ஜோதி அகவல்திருவடிப்புகழ்ச்சி		1	6
11.	மகாதேவமாலை மூலம் 100 பாடல்	0	0	6
12.	சுவாமிகளின் அழகிய திருவுருவப்படம் பெரிய சைஸ் வடலூர் ஜதீகத்துடன் (அளவு 20x15)	0	2	0
13.	வடலூர் ஞானசபை; தருமச்சாலை; சித்திவளாகம் மாமரம் சாலைக்கிணறு தனித்தனி	0	1	0
14.	விநாயகர், திருவடிப்புகழ்ச்சி, வடிவுடை மாணிக்க மாலை, கீர்த்தனை, நாமாவளி, கந்தப்பெருமான் திருவருட்பா தனித்தனி	0	0	3
15.	பாராயணத் திருவருட்பா; ஸ்ரீராமர் அருட்பா; உண்மை நெறி 100-க்கு 0-8-0. தனி	0	0	3

ரு. 1-க்கு குறைந்து வி. பி. அனுப்ப இயலாது.